Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 06, 2023

திங்கட்கிழமை நவம்பர் 06, 2023 | ஒளி: 09 கதிர் 121 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## காகித படகு குழந்தைக்கு எமனானது



■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மதுரங்குளியில் வீட்டுக்கு அருகில் இருக்கும் கால்வாய்க்குள் வீழ்ந்த இரண்டு வயது ஆறு மாதங்களேயான பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாய் மற்றும் அம்மம்மா ஆகியோர் வீட்டு முற்றத்தைத் துப்புரவு செய்து கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் சனிக்கிழமை (04) மாலை இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## வடக்குக்கு சீன வீடுகள்; சீன தூதுவர் கீ

■ க. அகரன்

வடமாகாண மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு ஞாயிற்றுக்கிழமை (05) வருகை தந்த அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு என்பது மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நீண்டகால உறவாகும்.

தொடர்ச்சி P2



### மூன்றாம் தவணைக்கான

## முதலாம் கட்டம் டிசெம்பர் 22 நிறைவு

தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளின் 2023ஆம் ஆண்டு மூன்றாம் தவணைக்கான முதலாம் கட்டம் டிசெம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இதற்கமைய, டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் ஜனவரி 31ஆம் திகதி வரை அரசாங்க மற்றும் அரசாங்க அனுமதி பெற்ற தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த

## பல்கலைக்கழக மாணவர்களில் அறுவர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு-சித்தாண்டியில் மேச்சல் தரை பண்ணையாளர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அறுவர், பொது போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் ஞாயிற்றுக்கிழமை (05) கைது செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.


தொடர்ச்சி P2

# கிரிக்கெட்டில் 'குரோனிசத்தை ஒழிக்கவும்'



இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திலும் விளையாட்டிலும் தனியுரிமை வாதம் இப்போது வெளிப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் இருந்து மீண்டு வர தனியுரிமை சர்ச்சைகள், வாதங்கள் இல்லாது கிரிக்கெட் மீண்டெழ வேண்டும் என்றும், இதற்கு நல்ல புரிதல் உள்ள திறமையானவர்களிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்து, அரசியல் ரீதியிலான தலையீடுகள் இடம்பெறாதிருக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




# மக்களின் அங்கீகாரம்

## 9 சதவீதமாக குறைந்தது

வெரிட்டே ரிசர்ச்சின் கேலப் பாணியிலான சமீபத்திய ஆய்வு சுற்றின் 'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பின்படி, 2023 ஜூன் மாதத்தில் 21% ஆக இருந்த அரசாங்கம் மீதான மக்கள் அங்கீகாரத்தின் மதிப்பீடு 2023 அக்டோபரில் 9% ஆக குறைந்துள்ளது.

தொடர்ச்சி P2



## தேங்காய் துருவியால் தாக்கியதில் மனைவி பலி: கணவனும் இறந்தார்

குடும்பச் சண்டை முற்றியதை அடுத்து தேங்காய் துருவியால், தலையில் தாக்கியதில் மனைவி மரணமடைந்தார். இதனையடுத்து, சந்தேகநபரான கணவனும் தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். இந்த சம்பவம் அளுத்கம பிரதேசத்தில், சனிக்கிழமை (04) மாலை இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



## 23 சதவீதமானோர் நீரிழிவால் பாதிப்பு

இலங்கையில் 23 சதவீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை உட்சுரப்பியல் நிபுணர்கள் கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## காசாவில் சிக்கியிருந்த 11 பேர் நாடு திரும்பினர்



இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக காசா பகுதியில் சிக்கியிருந்த நிலையில், எகிப்தின் ரஃபா நுழைவாயில் ஊடாக வெளியேறிய 11 இலங்கையர்களும் நாடு திரும்பியுள்ளனர்.

கட்டாரின் தோஹாவில் இருந்து வந்த விமானம் மூலம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இவர்கள், ஞாயிற்றுக்கிழமை (05) காலை வந்தடைந்தனர்.

தொடர்ச்சி P2



## இந்த ஜோடியை கண்டீர்களா?

நிதி மோசடி தொடர்பில் தேடப்படும் சந்தேகநபர் மற்றும் சந்தேக பெண் தொடர்பிலான தகவல்களை தந்துதவுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 4 கோரிக்கைகளை முன்வைத்தது மொட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நான்கு விசேட கோரிக்கைகளை உடனடியாக அமுல்படுத்துமாறு கோரியுள்ளது.




தொடர்ச்சி P2

## ஜீவனுக்கு நன்றி தெரிவித்த முதல்வர் மு.க. ஸ்டாலின்



"இலங்கையை வாழவைத்த மலையக தமிழ் மக்களை அனைத்து உரிமைகளுடனும் வாழ வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்காக தொப்புள்கொடி உறவான தமிழ்நாடு என்றும் குரல் கொடுக்கும்" என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

'நாம் 200' தேசிய நிகழ்வுக்கு வழங்கியுள்ள வாழ்த்து செய்தியிலேயே முதல்வர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்திய வம்சாவளி மக்கள் இலங்கையில் குடியேறி 200 ஆண்டுகள் நிறைவடைவதை சிறப்பிக்கும் வகையில் 'நாம் 200' நிகழ்வு, கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில், வியாழக்கிழமை, (02) அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2



## விகாரமஹா தேவியை ஒப்படைக்க பணிப்பு

விகாரமஹா தேவி பூங்காவைக் கொழும்பு மாநகர சபைக்கு ஒப்படைக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அண்மையில் பணிப்புரை வழங்கினார்.

அபிவிருத்தி நோக்கங்களுக்காக எந்தவொரு சொத்தையும் கையகப்படுத்தும் திறன் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உள்ளது. அது நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 50இன் படியாகும்.

திருத்த வேலைகள் நடவடிக்கைகளுக்காக கையகப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் திருத்த வேலைகளின் பின்னர் அந்த குறித்த சொத்துக்கள் எந்தெந்த நிறுவனங்களுக்குச் சொந்தமானதோ அந்தந்த நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வடக்குக்கு சீன வீடுகள்...

இலங்கையில் உள்ள மக்கள் எப்படியான சவால்கள் மற்றும் பிரச்சினைகளை எதிர் நோக்கினாலும் அதற்குத் தீர்வு காணும் வகையில் சீனா அரசாங்கம் கடந்த காலத்திலும், தற்காலத்திலும் செயற்படுவதுடன், எதிர்காலத்திலும் அதற்காக செயற்படும். அந்தவகையில் சீனா எப்பொழுதும் உங்களோடு கைகோர்த்து நிற்கும். கொவிட் தொற்றுக் காலத்தில் இலங்கைக்கு, சீன அரசாங்கம் சினோர்பாம் தடுப்பூசி மருந்தை வழங்கியிருந்தது.

இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குச் சீனா எப்பொழுதும் உதவும். அதாவது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளச் சீனாதான் முதன் முதலாக இலங்கையுடன் உடன்படிக்கை செய்து கொண்ட நாடாகும். இந்த உடன்படிக்கை செய்வது தொடர்பில் சில பிரச்சனைகள் கூட காணப்பட்டன என்றார்..

இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றச் சீனா அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. 500 குடும்பங்களுக்கு வவுனியாவில் நிவாரண பொதிகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். ஒவ்வொன்றும் 7,500 ரூபாய் பெறுமதியானவை. கடந்த காலங்களில் சீன தூதுவராலயத்தின் மூலம் நீர் சுத்திகரிக்கும் இயந்திரங்களை வடமாகாணத்தில் வழங்கியிருந்தோம்.

நாங்கள் எங்களது சகோதர சகோதரிகளுக்கு உதவுவதில் அக்கறை கொண்டுள்ளோம். சீனா அரசாங்கம் 155 மில்லியன் ரூபாயை, வடக்கு மாகாணத்தில் செலவு செய்யவுள்ளது. அதில் நிவாரணப் பொதிகள் வழங்குவது மட்டுமன்றி மீன்பிடி வலைகள் பெறுவதற்கும் பயன்படுத்தவுள்ளோம். மிகுதிப் பணத்தில் வடமாகாணத்தில் வீடுகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நாங்கள் தற்போது இலங்கை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து விடுபட உதவ முன்வந்துள்ளோம். அவர்கள் எதிர்காலத்தில் சந்தோசமான வாழ்க்கையை வாழ்வார்கள் என நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றார். `

# காகித படகு குழந்தைக்கு எமனானது

தமது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டில் சேகரித்த குப்பைகளைக் கொட்டுவதற்காகக் கால்வாய்க்கு அருகில் சென்றுள்ளனர் அப்போது நீரில் குழந்தை மிதந்துகொண்டிருப்பதைத் தாய் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, அயலவர்களின் உதவியுடன் அந்த குழந்தையை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். எனினும், அந்தக் குழந்தை ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேதப் பரிசோதனையின் பின்னர், நீரில் மூழ்கியதில் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக இந்த மரணம் நிகழ்ந்துள்ளது எனத் தீர்ப்பு வழங்கி சடலத்தை பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளதாக புத்தளம் பகுதிக்குப் பொறுப்பன திடீர் மரண விசாரணை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இன்னும் சில குழந்தைகளுடன் இணைந்து, கடதாசியினால் செய்யப்பட்ட படகுகளைக் கால்வாய் நீரில் விட்டு விளையாடிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்தச் சிறுமியும் ஏனைய சிறுவர்களும் அடங்கிய குழுவொன்று, வீட்டின் அருகாமையில் உள்ள கால்வாயில் காகிதப் படகுகளை விட்டு விளையாடி கொண்டிருந்துள்ளனர். அதனை அவதானித்த மதுரங்குளிய பொலிஸ் நிலைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு வீட்டிலிருந்தோருக்கு எச்சரித்துள்ளார்.

அவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்ட இரண்டு மணிநேரத்துக்குப் பின்னரே, கால்வாயில் இருந்து குழந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளது என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# முதலாம் கட்டம் டிசெம்பர் 22 நிறைவு

மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்ட பாடசாலை நடவடிக்கைகள் 2024 பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி ஆரம்பமாவதாகக் கல்வி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, முஸ்லிம் பாடசாலைகளுக்கு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த காலப்பகுதியில் 2023 கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைகள் நடத்தப்படும். ஜனவரி மாதம் 04ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை க.பொ.த உயர்தர பரீட்சை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக மாணவர்களில் அறுவர் கைது

யாழ். மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து, சித்தாண்டி முருகன் ஆலயத்துக்கு முன்னால் ஒன்று கூடிய மாணவர்கள், போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளரின் இடம் வரை ஊர்வலமாகச் சென்று அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதனையடுத்து அந்த பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டம் முடிவுற்ற பின்னர் மாணவர்கள் பஸ்வண்டியில் கிழக்கு பல்கலைக்கழகத்தை நோக்கி பிரயாணித்த போது பின்னால் சென்ற சந்திவெளி பொலிஸார் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் வைத்து பஸ்வண்டியை நிறுத்தி 6 மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.

# 23 சதவீதமானோர் நீரிழிவால் பாதிப்பு

நீரிழிவு நோய் ஆபத்தில் உள்ள நாடுகளில் உலகின் முதல் 10 நாடுகளுக்குள் இலங்கை உள்ளதாக அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீரிழிவு நோய்த் தொடர்பில், கருத்து தெரிவித்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை பேராசிரியர் வைத்தியர் பிரசாத் கட்டுலந்த, நீரிழிவு நோய் காரணமாக இலங்கையில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# ஜீவனுக்கு நன்றி தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்

இதில், சிறப்பு அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்றார். இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கௌரவ அதிதியாகப் பங்கேற்றார்

இதேவேளை, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த உள்ளிட்ட அரசியல்வாதிகள் பலரும் பங்கேற்றிருந்தனர். முதல்வரின் வாழ்த்துச் செய்தியில், " இலங்கையில் வாழும் மலையகத் தமிழர்களின் வாழ்வு என்பது 200 ஆண்டுகளை எட்டுகின்றது. இரண்டு நூற்றாண்டுகளாக தனிப்பெரும் இனமாக வாழ்ந்துவரும் மலையக தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்துகள். நான் உரையாற்ற வேண்டும் என அழைப்பு விடுத்த அருமை சகோதரர் ஜீவனுக்கு நன்றிகள் என குறிப்பிட்டுள்ளார்.

# கிரிக்கெட்டில் 'குரோனிசத்தை ஒழிக்கவும்'

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் 43 ஆவது கட்டமாக பொலன்னறுவை, ஹிங்குராகொட யோதா ஏல மகா வித்தியாலயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறைக்கான உபகரணங்களை வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (04) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சகல விளையாட்டுகளும் அரசியல் தலையீடுகள் இன்றி இருக்க வேண்டும் என்றும், விளையாட்டு குறித்து நன்கு புரிதல் உள்ளவர்களுக்கு அதன் பொறுப்பை ஒப்படைத்து, கிரிக்கெட்டில் நிலவி வரும் தகுதிகளைப் பொருட்படுத்தாமல் அதிகாரம் உடைய பதவிகளுக்கு நியமனம் செய்யும் குரோனிசம் நடைமுறையில் களையப்பட வேண்டும் என்றும், தற்சமயம் கிரிக்கெட்டில் உள்ள குரோனிசம் காரணமாகப் பாடசாலை மற்றும் கழக மட்டத்திலான வீரர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய இடம் கிடைக்காது போயுள்ளதாகவும், 220 இலட்சம் மக்களுடன் இணைந்த கிரிக்கெட் ஒரு சிலரின் பேராசைக்காகப் பயன்படுத்தப்பட்டது பெரும் அவலத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது கிரிகெட் விளையாட்டில் தனிப்பட்ட வீரர்களின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் தீர்மானிக்கும் விதமாகக் கதாபாத்திரங்களைக் கட்டமைக்க கிரிகெட் நிறுவனத்தை முகாமிட்டுள்ளனர் என்றும், இந்நிலை மாறி, நாடு என்ற வகையில் ஒரே முகாமாக மாறி, பாடசாலை பருவத்தில் இருந்தே திறமையும், ஆற்றலும், இயலுமையும் உள்ளவர்கள் கிரிக்கெட் விளையாட்டின் உச்சத்துக்குச் செல்லும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்றும், இங்குள்ள அரசியல் தொடர்புகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும், திருடர்களைப் பாதுகாக்கும் அரசாங்கத்தால் கிரிக்கெட் விளையாட்டில் நடக்கும் திருட்டு ஊழல் மோசடிகளை ஒழிக்க முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில்இசகல விளையாட்டுகளும் அரசியல் தலையீடுகள் தவிர்ந்து ஒழுங்குபடுத்தப்பட்டு, அந்தந்த விளையாட்டு குறித்த அறிவுடன் உலகை வென்ற வீரர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு வீரரையும், காப்பாற்றவோ கைவிடவோ அல்லது தூக்கிப் பிடிக்கவோ தட்டிவிடவோ ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் தயாராக இல்லை என்றும் சஜித் மேலும் தெரிவித்தார்.

மக்கள் கஷ்டத்தில், ஆட்சியாளர்கள் சுகபோகத்தில்.

தற்போது, நாட்டு மக்கள் பல சவால்களை எதிர்கொள்வதுடன் பலர் தனிமைகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர் என்றும், நாட்டில் இவ்வாறான ஒரு நிலை இருந்தாலும் ஆட்சியாளர்கள் சுகபோகங்களை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும்

அவர்களின் சுகபோகங்களுக்கும் நலனுக்காகவும் நாடு முழுவதும் பயணிக்க போதிய பணம் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திக் கட்டணமும் 50% அதிகரிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக பாடசாலை அபிவிருத்திக் கட்டணங்களும் 50 வீதத்தினால் அதிகரிக்க முயற்சித்து வருகின்றனர் என்றும், பாடசாலைக் கல்விக் கட்டமைப்பிற்கு ஒதுக்கத் தேவையான நிதி அரசாங்கத்திடம் இல்லாவிட்டாலும், திருடுவதற்கு ஏராளமாகப் பணம் இருப்பதாகவும், அவசர கொள்வனவுகளின் கீழ் சந்தை பெறுமதியை விட அதிக விலை கொடுத்து மருந்துப் பொருள் மாபியாவில் ஈடுபட்டு வர போதிய பணம் இருந்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டினார். கடந்த 8 மாதங்களில் 7 இலட்சம் மக்களின் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

தற்போது 3 ஆவது தடவையாகவும் சட்ட விரோதமாக மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 8 மாதங்களில் நாட்டில் 7 இலட்சம் பேர்களது மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# மக்களின் அங்கீகாரம்

2023 ஜூன் மாதத்தில் 12% ஆக இருந்த நாட்டின் நிலை குறித்த திருப்தி சரி பாதியாக அதாவது 6% ஆக குறைந்துள்ளது என்று கணக்கெடுப்பு எடுத்துக்காட்டுகிறது. பொருளாதாரம் மீதான நம்பிக்கை மதிப்பெண் ஜூன் மாதத்தில் எதிர்மறை (-) 44 இருந்து எதிர்மறை (-) 62 ஆக குறைந்துள்ளது.

' தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பு வருடத்திற்கு மூன்று முறை நடத்தப்படுகிறது, மேலும் நாடளாவிய ரீதியில், தேசிய அளவிலான பிரதிநிதித்துவ பதில்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டே இக் கருத்துக்கணிப்பு இடம்பெறுகிறது. இக் கணக்கெடுப்பு மாதிரி மற்றும் முறையானது 95% நம்பிக்கை மட்டத்தில் அதிகபட்ச பிழை வரம்பு 3% க்கும் குறைவாக கட்டுப்படுத்தும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மீதான அங்கீகாரம்: "தற்போதைய அரசாங்கம் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா அல்லது மறுக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு, 9% பேர் தாங்கள் அதை அங்கீகரிப்பதாகக் கூறியுள்ளனர் (1.93% பிழை விளிம்புடன்). மேலும், 7% பேர் தங்களுக்கு அதை பற்றிய எந்தவித கருத்தும் இல்லை என்று கூறியுள்ளனர். அரசாங்கம் மீதான அங்கீகாரம் தொடர்பான தற்போதைய மதிப்பீடு 2022 ஜனவரி, ஒக்டோபர் மற்றும் 2023 பெப்ரவரியில் இருந்த 10% அருகிலுள்ள மதிப்பை பிரதிபலிக்கிறது.

இலங்கை குறித்த திருப்தி: "பொதுவாக, இலங்கையில் நடக்கும் விடயங்கள் குறித்து நீங்கள் திருப்தியடைகிறீர்களா அல்லது அதிருப்தியடைகிறீர்களா?" என்ற கேள்விக்கு, 6% பேர் மட்டுமே திருப்தியடைவதாக தெரிவித்துள்ளனர் (- 1.66% பிழை விளிம்புடன்). இந்த மதிப்பீடு 2023 பெப்ரவரியில் காணப்பட்டதை போலவே 4% ஆக குறைவாகவே இருந்தது.

பொருளாதாரம் தொடர்பான நம்பிக்கை

ஜூன் மாதத்தில் எதிர்மறை (-) 44 ஆக இருந்த பொருளாதார நம்பிக்கை மதிப்பெண் ஒக்டோபரில் எதிர்மறை (-) 62 ஆக மோசமடைந்து காணப்படுகிறது.

# தேங்காய் துருவியால் தாக்கியதில் மனைவி பலி: கணவனும் இறந்தார்

கயானி ஷஷிகபத்திரன (32) மற்றும் அஜித் குணசிங்க (41) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர். அவர்களுக்கு 6,10 மற்றும் 11 வயதுகளில் பிள்ளைகள் உள்ளனர். அந்த மூவரும் ஆண் பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விருவரும் முன்னர் வேறு இருவரைத் திருமணம் முடித்து இருந்தனர் என்றும், அவ்விருவரையும் பிரிந்து கடந்த 10 வருடங்களாக ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளனர் என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இளைய மகன் இவ்விருவருடைய பிள்ளை என்றும், ஏனைய இருவரும், இந்த பெண்ணுடன் முன்னர் வாழ்ந்த கணவனின் பிள்ளைகள் என்றும் அறியமுடிகின்றது. ஏனைய இருவரும் ஆச்சியுடன் (உயிரிழந்த பெண்ணின் தாய்) வாழ்ந்து வருகின்றனர்.

இவ்விருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டபோது, இளைய மகன் மட்டுமே வீட்டில் இருந்துள்ளார். எனினும், இவ்விருவருக்கும் இடையிலான குடும்பப் பிரச்சினை தொடர்பில், மூன்று முறைப்பாடுகள் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பெண், வேலைக்குச் செல்வதில்லை என்றும், அந்த நபர், மத்துகமவில் உள்ள பேக்கரி ஒன்றில் தொழில் புரிந்து வந்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது. வாய்த்தர்க்கத்தின் போது, தேங்காய் துருவியால் பெண்ணின் தலையில் தாக்கியதால் அப்பெண் உயிரிழந்துள்ளார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இந்த ஜோடியை கண்டீர்களா?

பத்தரமுல்ல, உடமுல்ல பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான கட்டடத்தை புனரமைத்து தருவதற்கு 99 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாயை அந்த நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொண்டு, அந்த பணத்து ஏற்றவகையில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளாது மோசடி செய்தனர் என்று படத்தில் உள்ள இருவருக்கு எதிராகவும் மிரிஹான விசேட குற்றப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் ஈடுபட்டிருந்த இருவரும் தெஹிவளை, பெப்பிலியான வீதியில் "D" Marc solution (PVT) LTD என்ற பெயரில் குத்தகை நிறுவனத்தை நடத்திச் சென்றுள்ளனர்.

இந்த மோசடியாளர்கள் இருவரையும் கைது செய்வதற்கு தேவையான தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இருவரையும் கைது செய்வதற்கு தேவையான தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வத்தளை, ஹெந்தல, காதினால் குரே மாவத்தை இல.31 என்ற விலாசத்தைச் கொண்ட ( தேசிய அடையாள அட்டை இலக்கம்- 923394800 V) விக்னேஸ்வரன் கணேசன்,

காலி, தங்கெதர, ரிச்மன் சிட்டி ஹிரிபுர குறுக்கு வீதி, இல 04/4 என்ற விலாசத்தைச் கொண்ட (தேசிய அடையாள அட்டை இலக்கம்- 198763501900 ரேவல் நி ரோஷினி ராஜரட்ணம் ஆகிய இருவரையும் பொலிஸார் தேடுகின்றனர்.

தகவல் தெரிந்தோர் விசேட குற்ற விசாரணைப் பிரிவுக்கு 071-8137373 அல்லது 011-2852556 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.99 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாயை அந்த நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொண்டு, அந்த பணத்து ஏற்றவகையில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளாது மோசடி செய்தனர் என்று படத்தில் உள்ள இருவருக்கு எதிராகவும் மிரிஹான விசேட குற்றப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# விகாரமஹா தேவியை ஒப்படைக்க பணிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய காலப்பகுதியில், இந்த பூங்காவை நவீன உலகிற்கு ஏற்றவாறு நவீனப்படுத்துவதற்கு உழைத்தார்.

அதன்படி, அதுவரை கொழும்பு மாநகர சபையின் கட்டுப்பாட்டிலிருந்த விகாரமஹாதேவி பூங்கா 2011இல் திருத்த வேலைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்டது. இதன்படி, உலக வங்கியின் உதவியுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொழும்பு மெட்ரோ நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2013இல் விகாரமஹா தேவி பூங்கா புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

# காசாவில் சிக்கியிருந்த 11 பேர் நாடு திரும்பினர்

காசாவில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் எகிப்துக்கு கடந்த 3ஆம் திகதி வந்ததாக பலஸ்தீனத்தில் உள்ள இலங்கை பிரதிநிதி அலுவலகம் தெரிவித்திருந்தது. அவர்கள் அனைவரும் ரஃபா நுழைவாயில் வழியாக எகிப்துக்கு வந்து எகிப்தில் உள்ள ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டு, அழைத்துவரப்பட்டுள்ளனர்.

# 4 கோரிக்கைகளை முன்வைத்தது மொட்டு

சமுர்த்தி மானியத்தை தொடர வேண்டும், உர மானியத்தை தொடர்ந்து வழங்க வேண்டும், எம்.பிக்களுக்கான ஒதுக்கீட்டை மீண்டும் வழங்க வேண்டும், அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பின் போது வேலைவாய்ப்பை இழக்காமல் இருக்க வழிசமைக்க வேண்டும் என்பனவே இந்த நான்கு கோரிக்கைகளாகும் என கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் செயலாளரின் கையொப்பமிடப்பட்ட கடிதத்தில் இந்த நான்கு கோரிக்கைகளும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது,

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான சிறந்த பொறிமுறை சமுர்த்தியாகும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## தமிழ்மொழி தின போட்டி 2023:

# நடவடிக்கை எடுத்தீர்களா?

■ சுஜிதா

ஒவ்வொரு வருடமும் மாணவரின் தமிழ் மொழியிலுள்ள அறிவையும் ஆற்றலையும் வெளிக்கொணர்வதற்காக தமிழ் மொழி தின போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அதற்கமைய மாணவர்களை பிரிவு 1 முதல் 5 வரை பிரிவுகளாக பிரித்து பல தனி மற்றும் குழு நிலை போட்டிகள் நடாத்தப்படுகின்றன. அத்தோடு திறந்த போட்டிகளும் உள்ளன. இவை அனைத்தும் பாடசாலை - கோட்டம் - வலயம் - மாகாண மட்டம் வரை போட்டிகள் நடாத்தப்பட்டு இறுதியாக முதலிடம் பெறுவோரை தேசிய மட்ட பொட்டிக்கு தெரிவு செய்யப்படுகின்றனர்.

9 மாகாணத்திலிருந்தும் போட்டியிட்டு முதலிடம் பெற்ற திறமையான மாணவர்கள் தேசிய மட்ட போட்டியில் பங்கேற்க முழு தகுதியையும் பெறுகின்றனர். அந்த வகையில் 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட தமிழ் மொழித் தின போட்டிகள் கொழும்பில் நடைபெற்றன.

குறித்த போட்டிகளுக்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட பிரிவினர் மிகச் சிறப்பாக முன்னெடுத்தனர். மேலும் இவ்வாண்டிற்கான தேசிய மட்ட போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு கொழும்பு விவேகானந்தர் கல்லூரியில் ஒக்டோபர் 28ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் கலந்து சிறப்பித்தார்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்றும் போட்டிகள் அனைத்தும் உரிய முறையில் நியாயமாக நடைபெறும் என்ற நம்பிக்கையுடன் 9 மாகாணங்களிலிருந்தும் போட்டியாளர்கள் களம் இறங்கினர். ஆனால் ஒரு சிலரின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் மாணவர்களின் உண்மையான திறமைக்கு இடமில்லாமல் போய் விடுகிறது.

இம்முறை தேசிய மட்ட போட்டியின் பிரிவு 2 இந் கான "தமிழறிவு வினா விடை எழுத்தாக்க " போட்டி விவேகானந்தர் கல்லூரியில் 28ஆம் திகதி நடைபெற்றது. இருப்பினும் இப்போட்டி நேர்மையாக நடாத்தப்படவில்லையென போட்டியிட்ட போட்டியாளர்களும் அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர். ஏனெனில் 2019ஆம் ஆண்டு தேசிய மட்ட போட்டிக்கு பயன்படுத்திய அதே வினாத்தாளையே எவ்வித மாற்றமும் (ஆண்டு உட்பட) செய்யாது இம்முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக போட்டியாளர்கள் தெரிவித்தனர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் குறித்த எழுத்தாக்கப் போட்டியில் 2019இல் கலந்து கொண்ட மாணவர்களும் இதனை ஒப்புக் கொண்டனர்.

தமிழறிவு வினா விடை எழுத்தாக்க போட்டியானது முதற்தடவையாக 2019இல் நடைபெற்றதோடு, இரண்டாவது தடவையாக இவ்வருடமே நடைபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2 தடவைகள் மாத்திரமே நடைபெற்ற இப்போட்டிக்கான வினாப் பத்திரத்தை மட்டும் ஏன் ஒரே மாதிரி மாற்றமின்றி தயாரிக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குறிப்பாக தமிழறிவு வினா விடை எழுத்து 2019 என்பதில் கூட மாற்றம் செய்யாது அப்படியே போட்டோ பிரதி எடுக்கப்பட்டு 2023 இற்கும் நடாத்தப்பட்டமையையே பலரும் விமர்சிக்கின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பான முறைபாட்டினையும் போட்டி ஏற்பாட்டுக் குழு ஏற்க மறுத்துள்ளது. அனைத்து போட்டிகளும் சுற்றறிக்கைக்கமையவே நடத்துவதாக ஏற்பாட்டுக் குழு கூறியதாக பாதிக்கப்பட்ட வர்கள் தெரிவித்தனர். அப்படியாயின் போட்டிகளில் ஏற்படக்கூடிய அதிருப்தி/ தவறுகளை யாரிடம் முறையிடுவது? போட்டிகள் நடைபெறும் போது களத்தில் 9 மாகாணங்களினதும் மாகாண பணிப்பாளர்கள் அல்லது அவர்கள் சார்பில் பொறுப்பு கூறக் கூடிய அதிகாரிகள் இருக்க வேண்டுமல்லவா? இம் மோசடி தொடர்பான எழுத்து மூலமான முறை பாட்டினை பாதிக்கப்பட்ட போட்டியாளர்கள் மாகாண கல்வி பணிப்பாளருடாக நவம்பர் (30). கல்வி மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சரிடம் ஒப்படைத்துள்ளனர்.

2019 மற்றும் 2023இல் நடைபெற்ற தமிழறிவு வினா விடை எழுத்து போட்டியின் போது முதலாம் இடத்தை ஒரே மாகாணமே வெற்றியீட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டியில் இடம் பெற்றதாக கருத்தப்படும் செயற்பாட்டிற்கு எதிர்ப்பு செரி.வித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலம் முறைபாட்டு கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ள போதிலும், இன்று வரை அதற்கான நடவடிக்கைகள் எடுத்தாக தெரியவில்லை.

# கன மழையால் மக்கள் இடம்பெயர்வு





■ கெ.திவாகரன், டி.சந்ரு

மலையக பிரதேசங்களில் சீரற்ற காலநிலை காரணமாக நானுஓயா பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளிற்குள் வெள்ளநீர் உட்புகுந்தமையால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

நுவரெலியா- நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, கிளரண்டன், கிரிமிட்டி ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை (04) பிற்பகல் தொடர்ந்து பெய்த கன மழைக் காரணமாக வெள்ளம் ஏற்பட்டதால், பிரதான வீதிகளும் அதிக குடியிருப்புகளும் பாதிப்படைந்துள்ளதோடு, 28 பேர் தற்காலிகமாகத் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்தவ ர்களுக்கு உணவு குடிநீர் வசதிகளைத் தோட்ட நிர்வாகம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## மாடிக்கட்டம் கையளிப்பு

■ நூருல் ஹுதா உமர்

உலக வங்கியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் PSSP செயற்றிட்டத்தின் கீழ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவு செய்யப்பட்டு நிதி பெறப்பட்ட அன்னமலை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்கான இரண்டு மாடிக்கட்டடம் சனிக்கிழமை 04ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

## சிக்கினார் சிறைக்காவலர்

போதைப்பொருள் வைத்திருந்ததாகக் கூறப்படும் சிறைக்காவலர் ஒருவர் கண்டி, திகன பஸ் நிலையத்தில் நின்றிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளதாகக் கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் உடுதும்பர சிறைச்சாலையில் கடமையாற்றும் சிறைக்காவலர் எனவும், இரத்தினபுரியில் வசிக்கும் முப்பது வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கடலட்டை பிடித்த நால்வர் கைது

■ 06) பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் மற்றும் குருநகர் கடல்பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த நால்வர் ஞாயிற்றுக்கிழமை (05) காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடலட்டையை பிடித்துக்கொண்டு இருந்தவேளை மண்டைதீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களது படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல்வள திணைக்களத்துக்கு ஞாயிற்றுக்கிழமை (05) அழைத்து வந்ததன் பின்னர், நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.



## பிரபல திருடன் அகப்பட்டான்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்


மட்டக்களப்பு பகுதியில் அமைந்துள்ள வீடுகளின் நுழைந்து நகை உட்பட பெருமளவிலான இலத்திரனியல் உபகரணங்களையும் கொள்ளையிட்ட திருடனை ஞாயிற்றுக்கிழமை (05) காலை கைது செய்துள்ளனர்.

மேலும், திருடனின் வீட்டிலிருந்து இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பல பொருட்களை கைப்பற்றியுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த திருடன், மட்டக்களப்பு - திருமலை வீதியிலுள்ள வீட்டில் கடந்த மே மாதம் 21ஆம் திகதி 25,000 ரூபாய் பணம் மணிக்கூடு இமிடேசன் அலங்கார பொருட்கள் மற்றும் நகைகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் பல இடங்களில் நீண்டகாலமாகத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டு பலமுறை விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேக நபர் மட்டக்களப்பு நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தபடவுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## வகுப்பறை திறந்து வைப்பு

■ சிவா ஸ்ரீதரராவ்

இரத்தினபுரி - நிவித்திகல பேபொட்டுவ வித்தியாலயத்தில் 22 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆங்கில செயற்பாடு வகுப்பறை சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்கவினால் சனிக்கிழமை (04) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆங்கில செயற்பாடு வகுப்பறை பெரும்பாலானவை

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள மிகவும் கஷ்டமான பிரதேசத்தில் உள்ள

பாடசாலைகளிலேயே நிறுவப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## நம்மட படைப்புகள் கண்காட்சி 2023

■ ஏ.எம்.கீத்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மூதூர் ஜே.எம்.ஐ நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச கண்காட்சி மூதூர் ஆசிரியர் வாண்மை விருத்தி மையத்தில் கடந்த ஒக்டோபர் 25ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது.

இந்த கண்காட்சியில் மூதூர் மண் சார்ந்து வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், கையேடுகள், குறுந்திரைப்படங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் போன்ற வெளியீடுகளோடு மூதூர் சார்ந்த தொன்மையான பழங்கால பொருட்கள் மற்றும் Youtube கலைஞர்களின் நேர்காணல் என்று பல்வேறு இலக்கிய மற்றும் பண்பாட்டியல் சார்ந்த அம்சங்கள் இடம்பெற்றன.

## குருலை சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு



■ ஆ.ரமேஸ்

வலப்பனை கோட்டக் கல்விக்கு உட்பட்ட இராகலை கிருஸ்ணன் மாதிரி பாடசாலையில் மாணவர்களுக்கு தலைமைத்துவ பண்பை ஏற்படுத்தும் வகையில் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும், குருலை சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் பாடசாலையின் அதிபர் இரா.விஜயக்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை (03) நடைப்பெற்றுள்ளது.

இதன்போது குருலை சாரணர்களாக 40 மாணவர்களுக்கும், மாணவ தலைவர்களாக 40 மாணவர்களுக்கும் சின்னங்கள் சூட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மொனராகலை விபுலானந்தா

## த.ம. வித்தியாலய மாணவர்கள் முதலிடம்



■ ந.மலர்வேந்தன்

அகில இலங்கை தமிழ் மொழி தின தேசிய மட்ட நாட்டார் பாடல் போட்டி நிகழ்ச்சியில் மொனராகலை விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் முதலிடம் பெற்று வரலாற்று சாதனையை நிலை நிறுத்தியுள்ளார்கள்.

# பலவந்தமாக திணிக்கப்பட்ட சுமைகள் போதும்; இனி வேண்டாம்

நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கை, அரசாங்கத்துக்கு எதிராகக் கருத்துக்களைப் பார்க்கும்போது, நாடு பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றதா? என்ற நினைக்கத் தோன்றுகின்றது. அந்தளவுக்கு மக்கள் கடும் சுமையை சுமந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த சுமைகள் அணைத்தும் மக்களால் விரும்பி கேட்கப்பட்டவையல்ல. அவர்களின் மீது பலவந்தமாக சுமத்தப்பட்டது. நாட்டில் பல துறைகளிலும் மேற்கொள்ளப்படும் ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வக்கில்லாது, சாதாரண மனிதர்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகளையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து கொண்டிருக்கின்றது.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, சிற்றுண்டிகள், தேநீர் விலைகள் மற்றும் சாப்பாட்டுப் பொதிகளின் விலைகளும் அதிகரித்துள்ளது, ஆனால், அந்த விலைகளுக்கு ஏற்றவகையில், பொதிகளுக்குள் உணவு இருப்பதே இல்லை.

அரைவயிறும் கால் வயிறுமாகக் கிடந்த மக்கள் இன்று முழுப்பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது மட்டுமே உண்மையாகும். அதனால்தான், அரசாங்கத்துக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்கிவிட்டனர்.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, மின் செலவுகளைத் தவிர்ப்பதற்காக, இரண்டொரு மின் குமிழ்களை அணைத்துவிடுகின்றனர். அல்லது குறைந்தளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், பசிக்கும்போது கட்டாயமாகச் சாப்பிடவேண்டும். அல்லது நீராகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இருக்கும் நிலைமையில், பால் தேநீரைக்கூடப் பருகமுடியாத பாவிகளாக இலங்கை மக்களில் பலரும் இருக்கின்றனர்.

சீனிக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டதை அடுத்தும், ஏககாலத்தில் சமையல் எரிவாயுவுக்கான விலை எகிறியதை அடுத்துமே நிலைமை இந்தளவுக்கு மோசமாகியுள்ளது. இதற்கிடையே வற் வரி அதிகரிப்பை அடுத்து மக்கள் முகங்கொடுக்கவிருக்கும் துன்பங்களை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சீனியின் விலையை அதிகரித்து விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. எனினும், சீனி மோசடியில் ஈடுபட்டு, கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கியோர் இன்றும் உலாவிக்கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களைக் கைது செய்வதற்கான எவ்விதமான நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

இதனிடையே, நாட்டில், கொள்ளை, களவெடுப்பு, முடிச்சுமாற்றிகளின் கைவரிசைகள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன. பெறுமதியான பொருட்களுடன், தங்க நகைகளை அணிந்துகொண்டு, வெளியிடங்களுக்குச் செல்லமுடியவில்லை. குடும்பத்துடன் வீட்டை விட்டு வெறியேறினால், திரும்பிவந்து பார்க்கும்போது, வீடு சுத்தப்படுத்தப்பட்டிருக்கும். பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டிருக்கும். நாட்டின் நிலைமை அந்தளவுக்கு மோசமானமைக்கு பிரதான காரணமாக, ஒருநேர உணவைக்கூட சாப்பிடமுடிவில்லையே ஆதங்கமாகும். போதைப்பொருள் பாவனைக்காக திருடுவோரும் உள்ளனர்.

நாட்டில் கொள்ளைகள், களவெடுப்புகள் மலிந்து போனமைக்கு இந்த அரசாங்கமும், அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையுமே பிரதான காரணமாகும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.
தேவையற்ற நினைகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி -பருத்தியூர் பால.

## கடிதங்கள்

### யாருக்கும் அக்கறையில்லை

ஒவ்வொரு பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுக் கொண்டே செல்வதனால் மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி துறைகளைச் சார்ந்தோர் தங்களுக்கு ஏற்றவகையில் பொருட்களின் விலைகளை அதிகரித்துக்கொள்கின்றனர். சேவைகளின் கட்டணங்களையும் கூட்டிக்கொள்கின்றனர்.

பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் மக்கள், பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள். பயணிக்கும் எந்த ஒரு பேருந்துகளிலும் டிக்கெட்டுகள் வழங்கப்படுவதில்லை என்பது முக்கிய காரணமாகும். ஆகையால், ஒவ்வொரு போக்குவரத்து சபைகளும் முடிவொன்றை எடுப்பது மட்டுமன்றி சரியான தீர்வினை பெற்றுத்தர வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

உரிய முறையில் மிகுதி பணத்தைத் தராது விடுதல், சில்லறைகள் இல்லையெனத் தட்டிக்கழித்தல், சில்லறைகளைக் கொண்டுவராத பயணிகளைத் தரக்குறைவாகப் பேசுதல், சிறியவர்களும் கட்டணங்களை அறவிடுதல், இன்றேல், பெரியவர்களுக்கான கட்டணத்தையே சிறுவர்களுக்கு அறவிடுதல் உள்ளிட்டவை ஒவ்வொரு வீதிகளிலும் சேவையில் ஈடுபடும் பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் அவதானிக்க முடியும். ஆகையால், இது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுகின்றனர்.

– சிங்காரவேலன்

மயிலத்தமடு – மாதவணை

# திடீரென முளைக்கும் கதைகள்

லக்ஸ்மன்

தேர்தல் முறை திருத்தத்துக்கு புதிய ஆணைக்குழு நியமனம் செய்யப்படுகிறது. மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி குழு ஒன்றை நியமித்திருக்கிறார். பொலிஸ் மா அதிபருக்கு நான்காவது முறையும் சேவைக்கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. வற் வரி அதிகரிக்கப்படுகிறது, சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்தது. வரவு -செலவுத் திட்டம் மக்கள் நலனோம்பலுடன் வருமா? மயிலத்தமடு, மாதவணை பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களது சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் 40 நாளையும் கடந்து சென்று கொண்டிருக்கிறது இவ்வாறுதான் நம்முடைய நாட்டின் நிலைப்பாடு சிக்கலும் குழப்பமுமாக இருந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவருடைய பிரச்சினைகள், தேவைகள் முக்கியமானதாக இருந்துவிடுகின்றன. அதனால் ஏற்படுவதே பாகுபாடும் பாரபட்சமும், ஓரங்கட்டலும், முன்னுரிமைகளுமாகும்.

இந்த நிலையில், அம்பிட்டிய சுமணரத்ன தேரர் திடீரென சில விடயங்களுக்குள் மூக்கை நுழைத்தார். அதிலொன்று மயிலத்தமடு, மாதவணை விவகாரம். மட்டக்களப்புக்கு வருகைதந்த ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். அதன்போது அவர் நடந்து கொண்ட விதம் விமர்சனங்களுக்கு உள்ளானது. அடுத்ததுதான் அவருடைய தாயாரின் சடலம் புதைக்கப்பட்ட மயானம் அழிக்கப்பட்ட பிரச்சினை. ஏந்த ஒரு பிரச்சினையும் உருவாக்கப்படுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அந்தப் பிரச்சினையால் பலியாக்கப்படுகின்ற விடயங்களை எல்லோரும் மறந்துவிடுகிறோம். இந்த வகையில்தான் அவர் மீது ஐ.சி,சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதற்காக அவர் மன்னிப்பும் கோரியிருக்கிறார்.

அதேபோன்று, மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல் தரைக்கான கோரிக்கையுடன் மட்டக்களப்பு- சித்தாண்டிச் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்கள் தமக்கான நீதியைக்கோரி வருகின்றனர். அதேபோன்று மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரும் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்தப் போராட்டங்களில் ஈடுபட்ட 40பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளுக்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதில் எழுந்துள்ள கேள்வி ஒன்று முக்கியமானதாக இருக்கிறது. இக்கேள்வி சிலவேளைகளில் சம்பந்தமற்றதாக இருந்தாலும், பரம்பரை பரம்பரையாகப் பண்ணை வளர்ப்புக்கெனப் பயன்படுத்தி வந்த காணிகளில் அத்துமீறி பயிர்செய்கையில் ஈடுபட்டதோடு, குடியிருப்புகளையும் அமைத்து வருகின்ற அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியாத பொலிஸ் தரப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக எவ்வாறு சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும்? என்பதே அக்கேள்வி. இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களும், அதில் சம்பந்தப்படாதவர்களும் இதற்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள். இந்நடவடிக்கை பொலிஸாரது பாரபட்சத்தினைக் கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.

2009க்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேச்சல்தரைப் பிரச்சினை தொடங்கியது. முதல் பல தடவை தீர்வுக்காக முயற்சி செய்து பயனில்லாமல், பல பிரச்சினைகளை எதிர்கொண்ட கால்நடை வளர்ப்பாளர்கள் இறுதியாக எடுத்த முயற்சியாக இந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் அமைந்திருக்கிறது.

மயிலத்தமடு, மாதவணை பிரதேசம் 1974ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வட கிழக்கில் போர் முடிந்த கையோடு அத்துமீறிய குடியேற்றச் சம்பவங்கள் இங்கு இடம்பெற்றபோது, அவற்றினைத் தடுப்பதற்குச் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவர்களை வெளியேற்றுவதற்குக் கிழக்கு முதலமைச்சர் மற்றும் ஆளுநர்களால் 2009களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்போது முழுமையான பயனைத் தரவில்லை. அதேநேரம், 2015இல் ஆட்சி மாற்றத்தையடுத்து 2016இல் அத்துமீறியவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதோடு, நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்று மகாவலி அதிகார சபையினால் உறுதியளிக்கப்பட்டது. இருந்தாலும் அது முழுமையாக நடைபெற்றிருக்கவில்லை. கிழக்கு மாகாணசபை 2017 செப்டெம்பரில் கலைக்கப்பட்டதையடுத்து, அத்துமீறியவர்களது நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்தன. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் இந்த அத்துமீறல்கள் பூதாகாரமானது. அதற்கு முழுமையான ஒத்துழைப்பையும் உந்துதல் உதவிகளை வழங்கியவர் முன்னாள் கிழக்கு ஆளுநர் அனுராதா ஜகம்பத் ஆவார்.

மாவட்டத்தில் நடைபெறும் விவசாய ஆரம்பக் கூட்டங்களில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கால்நடைகளை அதற்கு ஒதுக்கப்பட்ட இடமான மயிலத்தமடு, மாதவணை போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அங்கு கால்நடைகளைக் கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன.

பெருந்தொகை கால்நடைகள் அத்துமீறி இப்பிரதேசத்தில் பயிர்செய்கையில் ஈடுபடுவோரால் களவாடப்படுவதும், பிடிக்கப்படுவதும், இறைச்சிக்காகக் கொல்லப்படுவதும், பொறி வெடிகள் எனப்படும் குண்டுகளால் கொல்லப்படுவதும் வாய் மற்றும் உடற் பாகங்கள் பாதிக்கப்படுவதும் வழமையாக இடம்பெறும் சம்பவங்களாகிவிட்டன. அவ்வாறு காணாமல்போன தமது கால்நடைகளைத் தேடிச் செல்லும் பண்ணையாளர்கள் தாக்கப்படல், கைது செய்யப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன. பொலிஸ் திணைக்களம், வனவள பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், என அனைத்து தரப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்களுக்கு எதிராகவும் விரோதமாகவுமே செயற்படுகின்ற நிலையில் போராட்டமாகவே ஜீவனோபாயத்தை நடத்துகின்றனர்.

இவ்வாறு இன்னல்களை அனுபவித்தபடியே தங்களது கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கின்ற பண்ணையாளர்களுக்கு ஏற்கனவே வாய் மொழி மூலமாக வழங்கப்பட்ட தீர்வுகள் எதுவும் பயனில்லாதவைகளாகவே இருந்துள்ளன. அந்த ஒழுங்கிலேயே கடந்த மாதத்தில் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட தீர்வுகளும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது இந்த இடத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவின் ஈரணைக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 6,383 ஹெக்டெயரும், கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் குடும்பிமலை கிராம சேவையாளர் பிரிவில் 9,969 ஹெக்டெயரும் முன்மொழியப்பட்டுள்ளன. இருப்பினும் அது வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில் தான் 1962ஆம் ஆண்டிலிருந்து 1983 வரை அங்கு வசித்துவந்தோம், யுத்த கால வன்முறை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து சென்றோம், எங்களது ஆவணங்கள் எதுவும் எங்களிடமில்லை என்ற கருத்து இப்போது புதிதாக வெளிவரத் தொடங்கியிருக்கிறது. 2009களில் தொடங்கப்பட்ட இந்த அத்துமீறலில் இவ்வாறான கருத்துக்கள், தகவல்கள் பகிரப்பட்டிருக்கவில்லை. என்பதுடன், ஏன் இப்போது வெளியிடப்படுகிறது என்பதனை அடிப்படையாகக் கொண்டே இதனை ஆராய வேண்டும். இது கடந்த மாதம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மேய்ச்சல்தரைப் பிரதேசத்தில் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் வேறு இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுடைய மாவட்டங்களிலேயே காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அதிகாரிகளுக்கான ஜனாதிபதி ரணிலின் பணிப்புரையை அடுத்து உருவாக்கப்பட்டிருப்பதாகவே கொள்ள முடியும்.

கல்லோயா குடியேற்றம், அல்லை-கந்தளாய் குடியேற்றம் என பல குடியேற்றங்களைக் கிழக்கில் ஏற்படுத்தி கிழக்கில் தமிழர்களுடைய இனப் பரம்பலைக் குறைத்தது மாத்திரமல்லாமல், மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அம்பாறை மாவட்டம் தனியான மாவட்டமாக அறிவிக்கப்பட்டது.

தமிழர்களுடைய இனப்பரம்பல் கிழக்கின் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் குறைந்து கொண்டே வருகிறது. மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமே பெரும்பான்மையாகத் தமிழர்கள், தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற மாவட்டமாக இருந்துவருகிறது. அந்தவகையில் இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாடாகவே மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல்தரைப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் குடியேற்ற நடவடிக்கைகள் பார்க்கப்படவேண்டும். அலுவலக, நிருவாக ரீதியாக செயற்படுத்த முடியாத விடயங்களை மேற்கொள்வதற்கான இலகுவான வழியாக அத்துமீறல்கள் கைக்கொள்ளப்படுவது வழமையாகும்.

அந்த வகையில்தான் அத்துமீறுவோர் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முனைந்துவருகின்றனர் என்பது தமிழர் தரப்பின் குற்றச்சாட்டாகும். மொத்தத்தில், நெருக்குவாரங்கள், அத்துமீறல்கள், அடாவடிகள் எனத் தொடரும் பிரச்சினைகளுக்கு புதுக்கதைகளுக்கிடையில் என்னதான் முடிவு என்பதே எதிர்பார்ப்பு.




# காத்திரமான நடவடிக்கை அவசியம்



ஜலீல்

'அரச ஊழியர்கள் சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதிய முரண்பாடுகளை உடன் நிவர்த்தி செய்யக் கோரி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும்வகையில் அரச ஊழியர்களது பணிப்புறக்கணிப்பில் இடம்பெற்றமை அறிவோம்

அரச ஊழியர்கள் எனும்போது அரச வைத்தியர்கள், ஆசிரியர்கள், தபால் ஊழியர்கள், இபோச ஊழியர்கள் ரயில்வே ஊழியர்கள், மின்சார ஊழியர்கள், நீர் வடிகாலமைப்பு மற்றும் அரச காரியாலயங்கள் திணைக்களங்களின் ஊழியர்கள் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

வந்த அரசாங்கங்கள் வரவு-செலவுத் திட்டங்களைப் பாராளுமன்றில் சமர்ப்பிக்கும்போது, அரச ஊழியர்களுக்கான இயன்ற சம்பளங்களையும் அதிகரித்தே வந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. எனினும், காலவோட்டத்தில் ஏற்படும் வாழ்க்கைச் செலவுகளுக்கு ஈடுகொடுக்கும்வகையில் அரசாங்கம் அரச ஊழியர்கள் விடயத்தில் கவனம் செலுத்தாத நிலைமையினால், அரச ஊழியர்கள் சம்பள உயர்வு கோருவது நியாயம்தான்.

அரசாங்கத்தில் ஒருவர் வேலைவாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதென்றால் அதற்காக விண்ணப்பங்களுடன் சேவையாயின் சிபார்சுக் கடிதங்கள், நற்சான்றுகள், தகுதிகள் உட்பட சகல ஆவணங்களையும் தயார்செய்து குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட விண்ணப்பங்களைக் கோரும் நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பதிலும் மிகுந்த சிரமப்படுவதைக் காண்கிறோம்.

சிலவேலைகளில், இதற்காக ஏதும் மேலதிகமாகப் பணம் செலவு செய்ய நேரிடும் பட்சத்தில் அதற்காகத் தம்மிடம் போதிய பணம் இல்லாவிட்டாலும் கடன் வாங்கியோ அல்லது தமது முக்கிய உடமைகளைக்கூட விற்கவோ, ஈடுவைக்கவோ முன்வருவோரும் உண்டு.

இவ்வாறு தொழில் வாய்ப்புப் பெற்றுக்கொண்டவர்களுள் மக்களின் நிலையறிந்து முகமலர்ச்சியோடு உரிய நேரத்தில் தன்னலம் பாராது மக்களின் தேவைகளை நிறைவுசெய்து கொடுப்பவர்கள் குறைவுதான் எனினும் இவர்களுள் சிலர் மக்கள் நலனை உயர்வாகக் கருதி தமக்குக்கிடைக்கும் ஊதியத்துக்கு மதிப்பளிக்கும்வகையில் இயன்றவரை பணிப்புறக்கணிப்புகளை விரும்பாது பணியாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்

காலஞ்செல்ல, செல்ல ஊழியர்கள் தமது நன்மை கருதி பலத்தை நிரூபிக்கும் வகையில் பல பெயர்களில் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வாழ்க்கை செலவுகளுக்கு ஈடுகொடுக்கும்வகையில் அரசாங்கம் அரச ஊழியர்கள் விடயத்தில் கவனம் செலுத்தாத நிலைமயினால், அரச ஊழியர்கள் சம்பள உயர்வு கோருவது நியாயம்தான்**

**ஆவணங்களை தயார்செய்து குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைக் கோரும் நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பதிலும் மிகுந்த சிரமப்படுவதைக் காண்கிறோம்**

**பணிப்புறக்கனிப்புகளில் ஈடுபடுவதாக அரச ஊழியர்கள் குற்றம்சாட்டுவதையும் ஊடகங்கள் வாயிலாகக் காண்கிறோம். இந்த விடயத்தில் ஏது உண்மை என்பதை மக்கள் புரிந்துகொள்ளமுடிவதில்லை**

**வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டபடி சம்பள அதிகரிப்பு இல்லையெனில் பெரும் பணிப்புக்கணிப்பு நடத்தப்படுமென அரச ஊழியர்களும் அறிவித்துள்ளனர்**

இச்சங்கங்களின் பெயருடன் மேலே குறிப்பிட்ட பணிப்புறக்கணிப்புகளில் அரச ஊழியர்கள் ஈடுபடுகின்றனர். தமது கோரிக்கை நிறைவேற்றப்படவேண்டுமென ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு மற்றும் போராட்டங்களில் ஈடுபடும்போது, துறைசார்ந்த அமைச்சர்கள் தமக்கு இதுபற்றி அறிவிக்காமல் இவ்வாறான பணிப்புறக்கணிப்புகளில் ஈடுபடுவதாகவும் அரச ஊழியர்கள் தாம் பல தடவைகள் அதுபற்றி அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்தும் பயன் கிட்டாத நிலைமையிலேயே பணிப்புறக்கனிப்புகளில் ஈடுபடுவதாக அரச ஊழியர்கள் குற்றஞ்சாட்டுவதையும் ஊடகங்கள் வாயிலாகக் காண்கிறோம். இந்த விடயத்தில் எது உண்மை என்பதை மக்கள் புரிந்துகொள்ளமுடிவதில்லை.

மேலும், ஊழியர்கள் மேற்கொள்ளும் பணிப்புறக்கணிப்புகளால் ஆத்திரம் கொள்ளும் மக்கள், ஊழியர்களுடன் முரண்படும் நிலைமைகளையும் காணமுடிகிறது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்துவதில் பொலிஸாரும் இராணுவமும் சங்கடங்களுக்கு மத்தியில் பணிபுரியவேண்டிவருகிறது. எனினும், அவர்களும் அரச ஊழியர்கள்தான் எனினும் பணிப்புறக்கனிப்பில் ஈடுபடுவதைக் காணமுடியவில்லை

அவ்வாறிருக்க இந்நாட்டில் சுமார் 15 இலட்சத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் அரச நிறுவனங்களில் மேலதிகமாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகவும் அவ்வாறானவர்கள் அரசியல் நிமித்தம் நியமனம் கிடைத்தவர்கள் எனவும் ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

அதுமட்டுமன்றி, அரச நிறுவனங்களில் ஊழல் மோசடிகளும் நிதி மற்றும் நேர வீண் விரயங்கள் நிறையவே இடம்பெறுவதாகவும் அவ்வப்போது ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன. இவை தொடர்பில், தக்க நடவடிக்கையெடுப்பதாக அரசாங்கம் அறிவித்தாலும், அதற்கும் அறைகுறையான தீர்வே கிடைப்பதாகவும் அறியமுடிகிறது.

அரச கருமங்கள் யாவும் இயங்குவதற்கு அரச ஊழியர்களே காரணம் எனலாம். நாட்டில் அடிக்கடி பணிப்புறக்கணிப்புகள், போராட்டங்கள் என்பன இடம்பெறுவது நல்லதல்ல.

இவற்றையெல்லாம் காணும் மக்கள், அரசாங்கத்துக்கு முதுகில் பலமில்லை எனவும் குறிப்பிடுவதுமுண்டு.

இந்நிலையில், அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவிருக்கும் வரவு-செலவு முன்மொழிவுகளில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு இருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டபடி சம்பள அதிகரிப்பு இல்லையெனில் பெரும் பணிப்புக்கணிப்பு நடத்தப்படுமென அரச ஊழியர்களும் அறிவித்துள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கையை மேற்கொண்டு அரச ஊழியர்கள் மட்டுமன்றி ஏனைய ஊழியர்களது நலன்களையும் பாதுகாத்து, பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

நுண் சிறு நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகள் மீதான

# நெருக்கடிகளின் தாக்கம் குறித்த அறிக்கை



"இலங்கையின் நுண் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (MSMEs) மீதான பல நெருக்கடிகளின் தாக்கம்" தொடர்பான முதன்மை அறிக்கையொன்றை சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (International Labour Organization - ILO) நாளை (7) வெளியிடவுள்ளது. இந்த அறிக்கை ILO மற்றும் NielsenIQ ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட விரிவான பகுப்பாய்வின் ஒரு அம்சமாகும், இதில் 10 மாவட்டங்களில் 550க்கும் மேற்பட்ட MSMEs-களிடம் நடாத்தப்பட்ட கணக்கெடுப்புகளும் அரச பிரதிநிதிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடன் துறை சார்ந்த நேர்காணல்களும் அடங்கும்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் MSMEகள் மீதான தாக்கத்தை பகுப்பாய்வு செய்வதன் மூலம், இந்த விரிவான மற்றும் சரியான நேரத்தில் புத்தாக்கமான ஆய்வு செய்தல், தொழிலாளர் சந்தை மீட்சி மற்றும் மாற்றத்திற்கான உத்திகளை வடிவமைப்பதற்கான ஒரு முக்கிய வளமாக செயல்படுதல், கொள்கை ஆதரவு குறித்து உட்பார்வைகளை வழங்குதல், துறையின் செயல்திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதாகும்.

"இலங்கையின் வேலைவாய்ப்பு மீட்சி மற்றும் எதிர்கால பொருளாதார வளர்ச்சியில் கணிசமான பகுதி MSMEs-களின் செயல்திறனைப் பொறுத்துள்ளது. இந்த புத்தாக்கங்கள் இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் மறுசீரமைப்பின் மையப்பகுதியாக வேலைவாய்ப்பு உருவாக்கத்துடன் MSMEs-களின் மீட்சியையும் அவற்றின் வளர்ச்சியையும் ஆதரிக்கும் கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்கும் செயல்முறையைத் தெரிவிக்க உதவும் என்று நம்புகிறோம்" என ILO இலங்கை மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங் தெரிவித்தார்.

அறிக்கையின் முக்கிய கண்டுபிடிப்புகளில் ஒன்று, COVID-19 பெருந்தொற்றிலிருந்து மீண்டெழுந்த MSMEகளில் சுமார் 80 சதவீதத்தின் வணிகச் செயல்பாடுகளை கடுமையாக பாதித்தது, அதே நேரத்தில் 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியானது கணக்கெடுக்கப்பட்டவர்களில் 89 சதவீதத்தை பாதித்தது, குறிப்பாக சுற்றுலா, உற்பத்தி, கட்டுமானம், போக்குவரத்து மற்றும் சேமிப்பு, மொத்த மற்றும் சில்லறை வணிகம், மற்றும் பிற சேவைகள் துறைகளில் இது வியாபித்திருந்தது. மேலும், MSME வளர்ச்சியை ஆதரிக்க அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து பெரும்பாலான MSMEகளுக்கு ஆதரவும் கிடைக்கவில்லை என்றும் அதற்கு பதிலாக தாங்களாகவே போராடினர் அல்லது தங்களது தொழிலை மூடினார்கள் என்றும் கண்டறியப்பட்டது.

மேலும், இத்தகைய மீண்டெழுந்த MSMEகள், வணிகச் செயல்பாடுகளுக்காக டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் மற்றும் தொழிலாளர்களின் வசதிகளின் அடிப்படையில் தங்கள் செயல்பாடுகளை சரிசெய்தல் போன்ற நெகிழ்வான வழிமுறைகளை ஏற்றுக்கொண்டது. மேலும், இந்த ஆய்வு தொழில்முனைவு நோக்குநிலை, தொழில்நுட்பம் சார்புடைய, காரணி மாற்றீடு, கழிவுகளைக் குறைத்தல் மற்றும் புதிய சந்தைகளைக் கண்டறிதல் ஆகியவற்றை முதன்மை மீள் உறுதித் திறன் காரணிகளாகக் கண்டறிந்துள்ளது.

இந்த அறிக்கையானது மாற்றத்திற்கான பரந்த பரிந்துரைகளையும் வழங்குகிறது. இலங்கையின் வேலைவாய்ப்பு மீட்சியில் பரந்த தாக்கத்தை ஏற்படுத்தும் MSME வளர்ச்சியை எளிதாக்குவதற்கான 12 முக்கிய நடவடிக்கை பகுதிகளை முன்னிலைப்படுத்துகிறது, மேலும் இவை முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் சாதகமான பொருளாதார சூழலை உருவாக்குதல், பொருளாதாரக் கொள்கை சீர்திருத்தங்களுடன் தொடர்புடைய தொழிலாளர் சந்தை விளைவுகளை கண்காணித்தல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்கும் அதே வேளையில் ஆற்றல் மற்றும் பயன்பாட்டு செலவுகளை கட்டுப்படுத்த நிறுவன சீர்திருத்தங்களை செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

இந்த அறிக்கையானது கொள்கை வகுப்பாளர்கள், வணிகத் தலைவர்கள் மற்றும் இலங்கையின் MSMEs-களின் எதிர்காலம் குறித்து கரிசனையுடைய பங்குதாரர்களுக்கு மிகவும் மதிப்புமிக்க வளமாகும். இது இந்த முக்கிய வணிகங்கள் எதிர்கொள்ளும் சவால்களின் விரிவான கண்ணோட்டத்தை வழங்குவதோடு அவற்றின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கும் தேவையான ஒத்துழைப்பு வழிமுறைகள் குறித்து முக்கிய நுணுக்க விபரங்களை வழங்குகிறது.

"ILO இலங்கையின் தொழிலாளர் சந்தை மீட்சி மற்றும் மாற்றத்திற்கான பாதையை ஆதரிப்பதில் உறுதியாக உள்ளது. மேலும், இந்த அறிக்கையானது அந்த திசையில் முக்கியமான படியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என சிம்ரின் சிங் மேலும் தெரிவித்தார்.

# Global Housing & Real Estate [Pvt] Ltd உடன் SLT-MOBITEL கைகோர்ப்பு



SLT-MOBITEL, நீர்கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சொகுசான தொடர்மனைத் தொகுதியான 'the Ocean Breeze Hotel Residencies'க்கு SLT-MOBITEL ஃபைபர் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக Global Housing & Real Estate (Pvt) Ltd உடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க மற்றும் Global Group தவிசாளர் தகுன் விக்ரமரட்ன ஆகியோர் கைச்சாத்திட்டனர். SLT-MOBITEL குழும பிரதம அதிகாரி நுகர்வோர் வியாபாரம் இமந்த விஜேகோன் மற்றும் Global Group பணிப்பாளர் பிரியந்தி அபேவீர ஆகியோரும் இந்த கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். SLT-MOBITEL மற்றும் Global Housing & Real Estate நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

நீர் கொழும்பில் அமைந்துள்ள The Ocean Breeze Hotel Residencies திட்டம், உயர்மட்ட வதிவிட அபிவிருத்தித் திட்டமாகும். இதில் 199 தொடர்மனை அலகுகள் காணப்படுகின்றன. வசிப்போருக்கு சொகுசான வாழிடப் பகுதிகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. இதில் உணவகம் மற்றும் ஸ்கை பார், நீச்சல் தடாகம், ஜிம்னாசியம், மொட்டைமாடி தோட்டம் மற்றும் 24-மணி நேர பாதுகாப்பு போன்ற உலகத் தரம் வாய்ந்த வசதிகள் அடங்கியுள்ளன.

SLT-MOBITEL உடனான பங்காண்மை தொடர்பில் Global Group தவிசாளர் தகுன் விக்ரமரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "SLT-MOBITEL வழங்கும் உயர்தர ஃபைபர் தீர்வுகளின் பயனை எமது வாடிக்கையாளர்கள் கண்டிப்பாக அனுபவித்து மகிழ்வார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஜாம்பவானுடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அதனூடாக எமது நிர்மாணத் திட்டங்களுக்கு நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது." என்றார்.

SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "Global Housing உடன் கைகோர்த்து, Ocean Breeze Hotel Residencies க்கு ஃபைபர் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதையிட்டு SLT-MOBITEL மகிழ்ச்சியடைகின்றது. வாடிக்கையாளர்களின் வாழ்க்கைமுறைகளை மேம்படுத்தும் உறுதியான மற்றும் புத்தாக்கமான தகவல் தொடர்பாடல் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்வதாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. SLT-MOBITEL ஃபைபர் தீர்வுகளினூடாக, ஒப்பற்ற இணைப்புத்திறன் வழங்கப்படும் என்பதில் நாம் உறுதியாக உள்ளதுடன், Ocean Breeze Hotel Residencies இன் ஒட்டுமொத்த வாழிட அனுபவத்தை மேம்படுத்துவதாக அமைந்திருக்கும்.

SLT-MOBITEL இனால் முழு Ocean Breeze Hotel Residencies தொகுதிக்கும் ஃபைபர் தீர்வுகளுடனான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டு, அதிவேக இணைய இணைப்புத்திறன், தெட்டத்தெளிவான குரல் தொடர்பாடல் மற்றும் உலகத் தரம் வாய்ந்த களிப்பூட்டும் அம்சங்களான high definition (HD) TV உள்ளடக்கத்தை PEO TV ஊடாக கண்டுகளிப்பது போன்ற வசதிகள் வழங்கப்படும். அத்துடன், குடியிருப்பாளர்களுக்கு அதிவேக புரோட்பான்ட் மற்றும் தொலைத்தொடர்பாடல் சேவைகளைப் பெற்று, உலகத்துடன் தொடர்பில் இருப்பதை உறுதி செய்வதுடன், ஒப்பற்ற வாழிட அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். அதுமட்டுமன்றி, வாடிக்கையாளர்களுக்கு தமது இல்லங்களை SLT-MOBITEL இனால் நிர்வகிக்கப்படும் Smart Home Facilities வழங்கப்படும். இதற்கும் SLT-MOBITEL ஃபைபர் வலுவூட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விமானத்தை தகர்க்க போவதாக மிரட்டல்



எயார் இந்தியா விமானத்தைத் தகர்க்கப் போவதாக காலிஸ்தான் பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னூன் பகிரங்கமாக மிரட்டல் விடுத்து வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில், "நவம்பவர் 19ஆம் திகதிக்குப் பின்னர் சீக்கியர்கள் யாரும் எயார் இந்தியா விமானத்தில் பறக்க வேண்டாம். உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். நவம்பர் 19 உலக பயங்கரவாத கோப்பையின் (உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்) இறுதிப்போட்டி நடைபெற இருக்கிறது. அதன் பின்னர் பெரிய மாற்றங்கள் நிகழவுள்ளன.

புதுடெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் பெயர் மாற்றப்படும். பஞ்சாப் விடுதலை அடைந்ததும் அந்த விமான நிலையத்தின் (இந்திராகாந்தி சர்வதேச விமானநிலையம்) பெயர் ஷாகித் பேனட் சிங், ஷாகித் ஷத்வந்த் சிங் காலிஸ்தான் விமான நிலையம் என்று மாற்றப்படும் " என்று கூறியுள்ளார்.

## வாபஸ் பெற்ற இஸ்ரோ தலைவர்

இஸ்ரோ தலைவர் சோம்நாத் "நிலவொளியைக் குடித்த சிங்கங்கள்" என்ற பெயரில் தனது சுயசரிதை புத்தகத்தை வெளியிட உள்ளதாக அறிவித்திருந்தார். இந்நிலையில், சுயசரிதை புத்தகத்தில் முன்னாள்

இஸ்ரோ இயக்குநர் கே.சிவன் குறித்து சில விமர்சனக் கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து, தனது சுயசரிதை புத்தகத்தை வெளியிடுவதில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார்.

மேலும், சோம்நாத் தனது சுயசரிதையில் தனது முன்னோடியான சிவனைப் பற்றி சில விமர்சனக் கருத்துகள் இருப்பதாகக் கூறப்பட்ட விவகாரம் தொடர்பாக செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்தார்.

அப்போது, "ஒரு நிறுவனத்தில் உயர் பதவியை அடைவதற்கான பயணத்தின் போது ஒவ்வொரு நபரும் சில வகையான சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். இதுபோன்ற முக்கிய பதவிகளை வகிக்கும் நபர்கள் பல சவால்களைக் கடக்க வேண்டியிருக்கும். அவற்றில் ஒன்று ஒரு நிறுவனத்தில் பதவிகளை பெறுவது தொடர்பான சவால்கள். இவை அனைவரும் கடக்க வேண்டிய சவால்கள்.

அதிகமான நபர்கள் குறிப்பிடத்தக்கப் பதவிக்கு தகுதியுடையவர்களாக இருக்கலாம். நான் அந்த குறிப்பிட்ட விடயத்தை வெளியே கொண்டு வர முயற்சித்தேன். இது சம்பந்தமாக எந்த குறிப்பிட்ட நபரையும் நான் குறிவைக்கவில்லை" என்றார்.



## மானியம் திட்டம் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு



கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஏழைகளின் பசியை போக்குவதற்காகப் பிரதம அமைச்சர் கரிப் கல்யாண் "அன்னயோஜனா" என்ற திட்டத்தை கடந்த 2020இல் இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.

இந்த திட்டம் அடுத்த மாதத்துடன் நிறைவடைய இருந்த நிலையில் இதை மேலும் நீட்டிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து உள்ளதாகப் பிரதமர் மோடி அறிவித்தார்.

சத்தீஸ்கரின் துர்க் பகுதியில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசும்போது "80 கோடி ஏழை மக்களுக்கு வழங்கப்படும் இலவச மானியம் டிசெம்பர் மாதத்துடன் நிறைவடைய இருக்கும் நிலையில், அது மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும். இது வெறும் ஒரு தேர்தல் அறிவிப்பு அல்ல, இது மோடியின் உத்தரவாதம்" என தெரிவித்தார்.

இஸ்ரேல்



# "ஹமாஸ் தலைவரை ஒழிப்போம்"

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட், கடந்த இரு நாட்களில் வடக்கு எல்லை மற்றும் தெற்கில் சுற்றுப்பயணம் செய்தார்.

அதன்பின்னர் அவர் செய்தியாளர்களைச சந்தித்த போது, "எவ்வளவு காலம் எடுத்தாலும் வெற்றி பெறும் வரை போராட படைகள் தயாராக உள்ளோம் என ரிசர்வ் படை வீரர்கள் என்னிடம் கூறினர்.

ஒரு வருடம் எடுத்துக் கொண்டாலும், இஸ்ரேல் தன் பணியை கண்டிப்பாக முடித்துவிடும்.

இஸ்ரேலியப் படைகள் காசாவில் ஹமாஸ் அமைப்பினருடன் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன. ஹமாஸ் தலைவரை கண்டுபிடித்து ஒழித்துக் கட்டுவோம்" என கூறியுள்ளார்.

இங்கிலாந்து




# 88 ஆண்டுகள் கழித்து மீட்கப்பட்ட சொக்லேட்

இங்கிலாந்தில் உள்ள லீட்ஸ் பகுதியில் வசிக்கும், வேறா பெட்செல் என்னும் சிறுமிக்கு 1935ஆம் ஆண்டு அவரின் தந்தை பரிசாக ஒரு சொக்லேட்டை வழங்கியுள்ளார். அப்போது அவருக்கு 8 வயதாக இருந்தது. அந்த சொக்கலேட், ராஜா ஐந்தாம் ஜோர்ஜ் மற்றும் ராணி மேரியின் வெள்ளி விழாவின் போது அளிக்கப்பட்டது.

அதன் பிறகு தனது தந்தையின் அறிவுரைப்படி சொக்லேட்டை ஒரு பாதுகாப்பான பெட்டியில் போட்டுப் பல ஆண்டுகளுக்குப் பாதுகாத்து வந்துள்ளார். கிட்டத்தட்ட தனக்கு 90 வயது ஆகும் வரை அவர் பத்திரப்படுத்தி வைத்திருந்த சொக்லேட் அந்த பெட்டியிலேயே இருந்துள்ளது. அந்த பெட்டியை எங்கு வைத்தோம் என்பதை மறந்துவிட்டார். கடந்த வருடம் தனது 95ஆவது வயதில் வேறா காலமானார்.

அவரின் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் என அனைவரும் அவரது அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, அவர்கள் அந்த பெட்டியைக் கண்டெடுத்துள்ளனர். வேறாவின் நான்கு குழந்தைகளின் ஒருவரான நாடின் மெக்காஃபர்டி என்பவருக்கு தற்போது 71 வயதாகிறது.

அவர்தான் அந்த சொக்லேட் பற்றிய இரகசியத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துள்ளார்.

பிள்ளைகள் அனைவரையும் வீடு முழுவதும் தேட சொன்னாராம். தேடியபோதே அந்த சொக்கலேட் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


துருக்கி

## "சுதந்திர பலஸ்தீனத்தில் காசா ஒரு பகுதியாக வேண்டும்"



தற்போது தீவிரமாக நடைபெற்று வரும் இஸ்ரேல்-ஹமாஸ் போரில், ஹமாஸ் அமைப்பினரை ஆதரிப்பதாகத் துருக்கி ஜனாதிபதி ரிசெப் டாய்யிப் எர்டோகன் (Recep Tayyip Erdogan) தெரிவித்துள்ளார்.

இந்த போர் குறித்து அவர், "காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்துகிறோம். இந்த போர் முடிந்ததும் காசாவில் அமைதியையும், அது ஒரு சுதந்திர பலஸ்தீனதின் ஒரு பகுதியாகவும் இருப்பதைப் பார்க்க விரும்புகிறோம். கிழக்கு ஜெருசலேம் நகரைத் தலைநகராகக் கொண்டு 1967இல் வகுக்கப்பட்ட எல்லைகளே அங்கு இருக்க வேண்டும். பலஸ்தீனர்களின் வாழ்வை இருளச் செய்யும் எந்த முடிவையும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம். இது குறித்த பேச்சு வார்த்தைகளில் துருக்கி ஈடுபட்டாலும், நேதன்யாகுவை ஆதரிக்கப் போவதில்லை. இஸ்ரேல் நடத்திய போர்க் குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் இஸ்ரேலை பொறுப்பாக்குவோம். இஸ்ரேலை ஆதரித்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் எங்கள் நம்பிக்கையை இழந்து விட்டது" என கூறியுள்ளார்.




உலகக் கிண்ணம்:

# வெளியேற்றப்பட்ட நடப்புச் சம்பியன்கள்

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான இங்கிலாந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் தோற்றதைத் தொடர்ந்தே அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இங்கிலாந்து இழந்திருந்தது.

ஏழு போட்டிகளில் விளையாடி இதுவரையில் ஒரு போட்டியிலேயே வென்றுள்ள இங்கிலாந்து இரண்டு புள்ளிகளுடனுள்ள நிலையில், அடுத்த இரண்டு போட்டிகளில் வென்றாலும் ஆறு புள்ளிகளையே பெற முடியும் என்ற நிலையில், புள்ளிகள் பட்டியலில் நான்காமிடத்திலுள்ள நியூசிலாந்து எட்டுப் புள்ளிகளுடன் காணப்படுகின்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

அவுஸ்திரேலியா: 286/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: மர்னுஸ் லபுஷைன் 71 (83), கமரொன் கிறீன் 47 (52), ஸ்டீவன் ஸ்மித் 44 (52), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 35 (32), அடம் ஸாம்பா 29 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 4/54, அடில் ரஷீட் 2/38, டேவிட் வில்லி 1/48)

இங்கிலாந்து: 253/10 (48.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: பென் ஸ்டோக்ஸ் 64 (90), டேவிட் மலன் 50 (64), மொயின் அலி 42 (43), கிறிஸ் வோக்ஸ் 32 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடம் ஸாம்பா 3/21, பற் கமின்ஸ் 2/49, ஜொஷ் ஹேஸில்வூட் 2/49, மிற்செல் ஸ்டார்க் 2/66)

போட்டியின் நாயகன்: அடம் ஸாம்பா

இந்நிலையில், பெங்களூருவில் நடைபெற்ற மற்றைய போட்டியில் நியூசிலாந்தை பாகிஸ்தான் வென்றிருந்தது.

இதேவேளை டெல்லியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## நியூகாசில் யுனைட்டெடம் தோற்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் அந்தோனி கோர்டன் பெற்ற கோல் காரணமாக 0-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது.

இதேவேளை, எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியன் அணிக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

## டொட்டமுண்டை வீழ்த்திய மியூனிச்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் வென்றது.

மியூனிச் சார்பாக ஹறி கேன் மூன்று கோல்களையும், டயொட் உபமெகனோ ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, மைன்ஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் ஆர்.பி லெய்ப்ஸிக் தோற்றது.





சிறுவர் கழகங்களை வலுப்படுத்தும் நோக்கில்

## பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள்

நூருல் ஹுதா உமர்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சமுர்த்தி திணைக்களம் என்பன நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை சகல வாய்ப்புக்களையும் சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சிறுவர் கழகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள சிறுவர் குழுக்கள், கழகங்களை மீளமைத்தல் மற்றும் மாணவர்களுக்கான விசேட விழிப்புணர்வு செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில், சிறுவர் கழக உறுப்பினர்கள் உள்ள பாடசாலைகளுக்கு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பி.யஷோதாவின் ஒருங்கிணைப்பில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ. பஸீனா ஆகியோரும் விளையாட்டுப் பொருட்களை பாடசாலை பொறுப்பாசிரியர்களிடம் வழங்கி வைத்தனர்.

சிறுவர்களுக்கு வாழ்வதற்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் சிறுவர் குழுக்களை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாதிரி பாடசாலை நிகழ்ச்சித்திட்டம், மற்றும் சிறுவர் பங்கேற்பை விஸ்தரிப்பதற்கான சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டம் மற்றும் முறையான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 06 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.